சரவணம்

மத்தூர் மு.சரவணன் – அழகம்மாள்
இணையின் குடிவழித் தொகுப்பு



ம.மு.சரவணன் – அழகம்மாள்

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்

குடும்பமும் வரலாறும்

நிலைபேறில்லாத இந்த உலகத்தில் தம்பெயர் நிலைபெறவேண்டும் என்ற விருப்புடையவர்கள் தங்கள் புகழ் நிலைத்திருக்குமாறு வாழவேண்டும். நம் புகழை நிலைநிறுத்தினால் நாமும் நிலைபெறலாம் என்பதே தமிழ் மரபு. ஒருவர் பெறும் புகழ் அவரின் குடும்பத்திற்கும் அவர் சார்ந்திருக்கும் சமூகத்திற்கும் அவர் வாழும் நாட்டிற்கும் இந்த உலகிற்கும் கிடைத்த புகழாகவே கருதப்படும். மகாத்மா காந்தி, அன்னை தெரெசா, சே குவேரா போன்றோர் ஒரு தனிச் சமூகத்திற்கு மட்டும் சொந்தமானவர்கள் என்று குறுக்கிவிடமுடியாது. அவர்கள் உலக முழுமைக்குமானவர்கள். அவ்வாறு வரலாற்றில் நிலைபேறடைந்தவர்களின் பெயர்கள் காலந்தோறும் தலைமுறைகள்தோறும் மீள நினைக்கப்படும். இந்த இறவாப் புகழைப் பெறுவதற்கான வழிகளையும் தமிழ்ச் சான்றோர் பலவாகப் பாடிவைத்துள்ளனர். அமிழ்தமே கிடைக்கப்பெறினும் தாம் மட்டும் உண்ணாமல் பிறர்க்கும் பகிர்ந்தளிக்கும் ஈகைக் குணமும் தம் சொந்த உயர்விற்காக அன்றிப் பிறர் உயர்விற்காகப் பாடுபடும் தொண்டுள்ளமும் புகழ் நிலைத்திருக்கும் இடங்களாகும் என்கிறது புறநானூறு. கடவுள் எங்கே வாழ்கிறார் என்ற கேள்விக்குப் பதிலாகக் கண்ணதாசன் பாடிய பாடலை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

பல நூல் படித்து நீ அறியும் கல்வி
பொதுநலன் நினைத்து நீ வழங்கும் செல்வம்
பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம்
இவை அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்!

கல்வியறிவு, பொதுநலம் விழையும் உள்ளம், பிறர் உயர்வில் பெறும் இன்பம் ஆகியவற்றில் கடவுள் உறைகிறார் என்கிறார் கவிஞர். இவ்வாறான மாண்புடைய பண்புகள் உடையவர்களை நாம் அவ்வளவு எளிதில் காணமுடியாது. மிகச் சிலரே தங்கள் மனத்தோடும் வெளியுலகப் பகட்டுகளோடும் போராடி இந்த மாண்புகளைக் கைக்கொள்கின்றனர். வேறு பலர் சுயநல எண்ணங்களாலும் போலிப் பகட்டுகளாலும் செயலூக்கம் இன்மையாலும் மிகச் சாதாரண வாழ்வை வாழ்ந்துமுடித்துச் சென்றுவிடுகின்றனர். பெருவாழ்வு வாழ்ந்த சான்றோர்கள் ஏதோ ஒரு தலைமுறையில் தோன்றி அவர்கள் வழியாகக் கிளைக்கும் அவர்களுடைய குடிவழிக்கு விளக்காகவும் வழிகாட்டியாகவும் அடையாளமாகவும் நிலைபெற்றுவிடுகின்றனர். அந்தக் குடும்பத்தின் வரலாற்றில் அவர்கள் முதன்மையானவர்களாகக் கருதப்படுவார்கள். இன்னும் சில குடும்ப வரலாறுகள் அவர்களிலிருந்தே தொடங்கும்.

எல்லாக் குடும்பங்களுக்கும் ஒரு வரலாறு இருக்கும். சில குடும்பங்களின் வரலாறு ஒரு நூற்றாண்டுக்குள் அடங்கிவிடும். இன்னும் சில குடும்பங்களின் வரலாறோ நூற்றாண்டுகள் கடந்து நிற்கும். நூற்றாண்டுகள் கடந்த வரலாறு உடைமைக்கான காரணம் என்ன என்று நாம் சிந்திக்கவேண்டும். குடும்பப் பெருமையைக் காப்பது என்பது ஒரு தொடர் ஓட்டம் போன்றது. ஒருவர் ஓடிவந்து முடித்த இடத்தில் மற்றொருவர் ஓடத் தொடங்கவேண்டும். அவர் முடிக்கும் இடத்திலிருந்து மற்றொருவர் ஓடத் தொடங்குவார். ஒருவர் ஓடி முடித்த இடத்திலிருந்து வேறொருவர் ஓடாமல்

நிறுத்திவிட்டால் அத்துடன் அந்த ஓட்டம் நின்றுவிடும். இது போன்றதே குடும்ப வரலாறு நீள்வதும் தொடர்ச்சியின்றி நின்றுபோவதும். நம் குடும்பம் 250 ஆண்டுகளுக்கும் மேலான வரலாறுடையது. சரவண தேசிகரின் காலந்தொட்டு வரலாற்றுச் சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. மூன்று நூற்றாண்டு வரலாறு கொண்ட நீண்ட பாரம்பரியம் மிக்க ஒரு குடும்பத்தின் கிளைகள் நாம். இந்த மூன்று நூற்றாண்டு வரலாறு என்பது வெறும் ஓர் எண் மட்டுமன்று. வரலாற்றில் பல படிநிலைகளைக் கடந்து வந்த காலமாகவும் அது திகழ்கிறது. 18'ஆம் நூற்றாண்டில் மன்னர்களின் ஆட்சி நடந்துள்ளது. அப்போது நமது குடும்பத்தில் சரவண தேசிகர் என்பவர் வாழ்ந்திருக்கிறார். 19'ஆம் நூற்றாண்டில் இந்தியா ஆங்கிலேயர்களுக்கு அடிமையானது. அந்தக் காலத்தில்தான் சாமிநாதன், முருகேசன் ஆகிய இருவர் வாழ்ந்துள்ளனர். 20'ஆம் நூற்றாண்டில் நாடு விடுதலை பெற்றது. அப்போது சரவணன் வாழ்ந்துள்ளார். நாம் வாழும் இந்த 21'ஆம் நூற்றாண்டில் இந்தியா நவீனமயமாக மாறிக்கொண்டு வருகிறது. சரவணன்-அழகம்மாள் வழிக் கிளைத்தவர்களாகிய நாம் இந்தக் காலத்தில் வாழ்ந்துவருகிறோம். எனவே, நாட்டினுடைய வரலாற்றின் பல நிகழ்வுகளைப் பார்த்தபடி இந்தக் குடும்பம் பயணித்து வந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில் மூன்று நூற்றாண்டுக் குடும்ப வரலாற்றின் சிறு குறிப்பினை நாம் அறிந்து வைத்திருத்தல் நமது கடமையாகவும் அமைகிறது.

மத்தூரரார் குடும்பம்

சரவணன் – அழகம்மாள் இணையின் வழியாகக் கிளைத்த இந்தக் குடும்பம் மற்றொரு பெருங்குடும்பத்தின் கிளைக் குடும்பமாக உள்ளது. அப்பெருங் குடும்பம் மத்தூரரார் குடும்பம் என்று அழைக்கப்படுகிறது. திருத்தணியை அடுத்த மத்தூர் என்னும் ஊரிலிருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் காஞ்சிபுரத்திற்குக் குடிபெயர்ந்த குடும்பம் என்பதால் இக்குடும்பம் மத்தூரரார் குடும்பம் என்ற பெயருடன் அழைக்கப்படுகிறது. இவர்கள் எப்போது யாருடைய காலத்தில் மத்தூரிலிருந்து குடிபெயர்ந்தார்கள் என்ற குறிப்புகள் கிடைக்கவில்லை. இக்குடும்பத்தினர் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாகவும் குறிப்பாக முருக வழிபாட்டை மேற்கொண்டவர்களாகவும் வாழ்ந்துள்ளனர்; தற்போதும் வாழ்ந்து வருகின்றனர். சாமிநாதன், முருகேசன், சண்முகம், சரவணன், கந்தசாமி, தணிகைமலை என்று முருகனின் பெயர்களையும் வள்ளி, பார்வதி, தெய்வானை, திருநாவுக்கரசு, சம்பந்தன், சுந்தர் போன்ற சைவ சமயம் சார்ந்த பெயர்களையும் இக்குடும்பத்தினர் கொண்டிருப்பதன் வழியாக இவர்களின் சைவ சமயச் சார்பினை அறியலாம். மேலும், காஞ்சிபுரம் கச்சபேஸ்வரர் கோவிலின் நிர்வாகத்தில் காலந்தோறும் மிக முக்கியமான பொறுப்புகளை ஏற்றிருந்தனர். அக்கோவிலின் புனரமைப்புப் பணிகளில் திரு சாமிநாதன் அவர்களின் சேவை அளப்பரியது என்பதைப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தக் குடும்பம் மத்தூரிலிருந்து வந்தது என்பதை நினைவுகூரும் வகையில் தங்கள் பெயர்களுக்கு முன்னர் 'ம' என்னும் எழுத்தை முதலெழுத்தாக வைத்து எழுதும் வழக்கத்தை இன்றும் சிலர் கடைப்பிடிக்கின்றனர். மத்தூரிலிருந்து குடிபெயர்ந்த இக்குடும்பம் காஞ்சிபுரத்தின் பிள்ளையார் பாளையம் பகுதியைத் தனது இடமாகக் கொண்டு வாழ்ந்தது. பாளையம் என்னும் சொல்லுக்குப் படை வீரர்கள் தங்கும் பகுதி என்றும் பொருள் உண்டு. காஞ்சிபுரம் பல்லவ மன்னர்களின் தலைநகரமாக இருந்ததால் இங்குப் படைகள் தங்குவதற்கான இருப்பிடங்கள் இருந்திருக்கவேண்டும். பல்லவர்

ஆட்சிக்குப் பின்னர்ப் பிற்காலச் சோழர்களின் மிக முக்கியமான நிர்வாக நகரமாகக் காஞ்சிபுரம் விளங்கியிருக்கிறது. ராஜராஜ சோழனின் தந்தையான சுந்தர சோழர் காஞ்சிபுரத்தில் இருந்த பொன் மாளிகையில்தான் இறந்தார். அதனால் அவருக்குப் பொன்மாளிகைத் துஞ்சிய தேவர் என்றே பெயர் அமைந்தது. இந்தப் பொன் மாளிகை ராஜராஜ சோழனின் அண்ணன் ஆதித்த கரிகாலனால் கட்டப்பட்டது. எனவே, சோழர்களின் படைகளும் காஞ்சியில் தங்கியிருந்தன என்பதை அறியலாம். விஜயநகரப் பேரரசு காலத்திலும் காஞ்சிபுரம் முக்கியமான நகரமாக இருந்துள்ளது. பல அரசுகளின் ஆட்சியில் காஞ்சிபுரம் இருந்ததால் படை வீரர்கள் தங்கும் பகுதியாகப் பாளையங்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம். இந்தக் குடும்பம் வாழ்ந்த தெரு தற்போது சேர்மன் சாமிநாதன் தெரு என்று அழைக்கப்படுவதோடு அக்கமாள் தெரு என்றும் அழைக்கப்படுகிறது. இதை அக்கணம் பாளையத் தெரு என்பதன் திரிந்த வடிவமாகக் கொள்ளவேண்டும். அக்காலத்தில் இந்தப் பகுதியில் தங்கியிருந்த படைவீரர்கள் போர் பற்றிய செய்தி வந்த அக்கணத்திலேயே(அந்த நொடியிலேயே) போருக்குத் தயாராக நிற்பார்கள் என்ற கருத்தில் இந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கலாம் என்பது செவிவழிச் செய்தி. எனினும் இந்தப் பெயர்களை விரிவாக ஆராயும் நிலையிலேயே இவை பற்றிய தெளிவான செய்திகள் நமக்குக் கிடைக்கும். இந்தத் தெருவில் ஆனந்த ருத்திரேசர் கோவில் அமைந்துள்ளது. இந்தக் கோவிலில் வீற்றிருக்கும் சிவனின் மீது கச்சியப்ப முனிவரால் வண்டுவிடு தூது, ஆனந்த ருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி போன்ற சிற்றிலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. கச்சியப்ப முனிவரும் இக்குடும்பத்தில் வாழ்ந்த சரவண தேசிகரும் சமகாலத்தவர்கள்.

மேலும், பிள்ளையார் பாளையம் என்னும் பெயர் குறித்து இரண்டு விதக் கருத்துகள் நிலவுகின்றன. அவற்றுள் ஒன்று வரலாற்று உண்மை சார்ந்தது. மற்றொன்று தொன்மம் சார்ந்தது. இப்பகுதியில் உள்ள திருமேற்றளிக் கோவிலுக்கு அருகில் முதல் மூன்று தேவாரங்களைப் பாடிய திருஞானசம்பந்தரின் மடம் உள்ளது. திருஞானசம்பந்தர் ‘பிள்ளையார்’ என்றும் அழைக்கப்படுபவர். இவரை ‘ஆளுடைய பிள்ளையார்’ என்றே சைவ மரபில் அழைப்பர். எனவே இவர் தங்கியிருந்த மடம் இந்தப் பகுதியில் இருந்தது என்பதால் இப்பகுதி பிள்ளையார் பாளையம் என்று அழைக்கப்பட்டுள்ளது. இது வரலாற்று நிலையில் அமைந்த பெயர்க்காரணம். விநாயகர் தமக்குத் தம்முடைய தாய் பார்வதி போன்றே மனைவி வேண்டும் என்று கருதி இந்தப் பகுதியில் ஒவ்வொரு தெருவின் மூலையிலும் அமர்ந்து தமக்குப் பெண் தேடினார் என்ற தொன்மக் கதையின் அடிப்படையில் இந்தப் பகுதிக்குப் பிள்ளையார் பாளையம் என்னும் பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர். அதன் அடையாளமாக இந்தப் பகுதியின் ஒவ்வொரு தெருவிலும் ஒரு பிள்ளையார் கோவில் அந்தத் தெருவை நோக்கி இருப்பதைக் காணலாம். இவ்வாறு இந்தப் பகுதியின் பெயருக்கான இரண்டு காரணங்கள் வழக்கில் உள்ளன.

மத்தூரிலிருந்து பிள்ளையார் பாளையம் அக்கணம் பாளையத் தெருவில் குடிபெயர்ந்த அக்குடும்பத்திலிருந்து தோன்றிய பல கிளைக் குடும்பங்களில் திரு சரவணன் – திருமதி அழகம்மாள் இணையின் குடும்பமும் ஒன்றாகும்.

சரவணன் – அழகம்மாள் இணை

திரு சரவணன் - திருமதி அழகம்மாள் இணையின் வழியாகக் கிளைத்த இந்தக் குடும்ப வரலாறு அவர்களுக்கு முன்பிருந்தே அடையாளம் காணக்கூடிய சிறப்புகளை உடையதாக இருக்கிறது என்பது இந்தக் குடிவழியில் தோன்றிய அனைவருக்கும் கிடைத்த பெருமையாகும். இந்தச் சிறப்பை மீட்டெடுப்பது பற்றியும் தக்கவைத்துக் கொள்வது பற்றியும் முன்னெடுத்துச் செல்வது பற்றியும் பின்னர் விளக்கப்படும். தற்போது, இந்தக் குடும்ப வரலாற்றின் அடையாளங்களாக வாழ்ந்து சென்ற சான்றோர் நால்வரைப் பற்றிய குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களைப் பற்றிய விளக்கத்தில் வேறு சிலரைப் பற்றிய குறிப்புகளும் இடம்பெறும் என்றாலும் இந்த நால்வர் மிகவும் முக்கியமானவர்கள். இவர்களின் வழியாகவே இந்தக் குடும்பத்தின் முழு வரலாறு கட்டமைக்கப்படுகிறது. இவர்கள் பெயருக்குப் பின்னர் இயல்பாகக் கொடுக்கப்படும் சாதிப் பெயர் இந்த நூலில் எவ்விடத்திலும் கொடுக்கப்படவில்லை. சாதி அடையாளத்தைக் கடந்து சிந்திக்க முனையும் கருத்தின் அடிப்படையில் இவர்களின் இயற்பெயர்கள் மட்டுமே இங்குக் கொடுக்கப்படுகின்றன. சாமிநாதன் வாழ்வில் அவர் செங்குந்தர் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் மிகவும் முக்கியமானவை என்று கருதப்படுவதால் அங்கு மட்டும் சமூகத்தின் பெயர் இடம்பெறுவது தவிர்க்கமுடியாததாகிறது. இந்தக் குடும்ப வரலாற்றினைக் கட்டமைத்த அந்த நால்வர்,

- சரவண தேசிகர்
- சேர்மன் ம.த. சாமிநாதன் – ம.த. முருகேசன்
- ம. மு. சரவணன்

ஆகியோர். இவர்களின் வரலாற்றை அறிந்துகொள்வதற்கு முன்னர்ச் சிலவற்றை மனத்திற்கொள்ளவேண்டும். இவர்கள் அனைவரும் குறைகள் அற்ற புனிதர்கள் என்று அடையாளப்படுத்துவது நம் நோக்கம் அன்று. முகமுள்ள அனைவருக்கும் முதுகும் உண்டு. சரவண தேசிகர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததால் அவரைப் பற்றிய மாற்றுக்கருத்துக்கள் தற்போது இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால், மற்ற மூவர் மீதும் நம் குடும்பத்தினரில் சிலருக்கும் வேறு பிறருக்கும்கூட மாற்றுக்கருத்துக்களும் விமர்சனங்களும் இருக்கக்கூடும். இவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டித் தாழ்த்திப் பேசுவதால் யாருக்கும் எந்தப் பயனும் விளையப்போவதில்லை. மாறாக, குறைகள் இருந்தும்கூட இவர்களால் ஓர் இலக்கை நோக்கிப் பயணிக்கவும் அதில் வெற்றியடையவும் முடிந்தது என்ற நிலையில் இவர்களை அணுகும்போது இவர்கள் வாழ்க்கை நமக்குப் படிப்பினையாக அமையும். அந்த வகையில்தான் இவர்களின் பெருமைகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

சரவண தேசிகர்

இவரை நம் குடும்பத்தின் தமிழ்த்தாத்தா என்றே அழைக்கலாம். 18’ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞான முனிவர் திருவாவடுதுறை ஆதீன மடத்தின் காஞ்சிபுரக் கிளை மடத்தில் சிலகாலம் வாழ்ந்துவந்தார். அப்போது அவருக்குக் கிடைத்த 12 சீடர்களுள் ஒருவராக விளங்கியவர் இந்தச் சரவண தேசிகர். இதற்குச் சான்றாக அந்த மடத்தின் ஒரு கல்வெட்டில் சிவஞான முனிவருடைய 12 சீடர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன என்பர். அந்தப் பட்டியலில் சரவண தேசிகர் பெயரும்

இடம்பெற்றுள்ளது. சிவஞான முனிவர் ஒரு தமிழ்க் கடல்; சைவ சமயத் துறவி. தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும் ஒருங்கே பெற்றவர். எனவே, இவர்தம் சீடராக இருந்த சரவண தேசிகர் சிவஞான முனிவரிடமிருந்து சைவ சமயம் குறித்தும் குறிப்பாகச் சைவ சித்தாந்தம் குறித்தும் தமிழ்மொழி இலக்கண இலக்கியங்கள் குறித்தும் அறிந்துவைத்திருந்தார் எனக் கருதலாம். சிவஞான முனிவர் காஞ்சிப்புராணம், சிவஞான மாபாடியம், தொல்காப்பியப் பாயிர விருத்தி, நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரைக்குக் குறிப்புரை, சோமேசர் முதுமொழி வெண்பா, இலக்கண விளக்கச் சூறாவளி போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இவர்தம் சீடர்களில் ஒருவராக விளங்கிய கச்சியப்ப முனிவரும் கச்சியானந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது, திருத்தணிகைப் புராணம், பேரூர்ப் புராணம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார். எனவே, அந்தப் புலமை மரபில் நெருக்கமாக இருந்த சரவண தேசிகரும் சைவ சித்தாந்தம் தொடர்பான பல நூல்களை இயற்றியுள்ளார். இந்தக் குடும்பத்தின் வரலாற்றில் முதலாவது அடையாளமாக விளங்கும் சரவண தேசிகர் ஒரு தமிழ்ப் புலவராகவும் சைவ சிந்தாந்த அறிஞராகவும் சைவத் துறவியாகவும் இருந்துள்ளார் என்பதை எண்ணிப் பெருமையடையலாம். சரவண தேசிகர் ஆறு நூல்களை எழுதியுள்ளார் என்பதற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. அவை யாவும் சைவ சித்தாந்த நூல்கள். அவை,

- வீட்டுநெறியுண்மை
- ஒருபாவுண்மையுபதேசம்
- பஞ்சாக்கரவநுபூதி
- உபதேசச் சித்தாந்த விளக்கம்
- முத்தி முடிவு
- ஒருபாவொருபது

இவை அனைத்தையும் தொகுத்துப் பின்னர் அச்சில் வெளியிட்டுள்ளனர். அதன் முகப்புப் பக்கம் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நூலின் தொடக்கத்தில் கச்சபாலயம் என்பவர் எழுதிய பாயிரத்தில் சரவண தேசிகர் பற்றிய சிறிய வரலாறு காணக்கிடைக்கிறது. இந்தப் பாயிரத்தைப் பாடிய கச்சபாலயம் என்பவர் சரவண தேசிகரின் சீடர் ஆவார். திருவாவடுதுறைச் சிவஞாந தேசிகனால் ஒருமொழி அரும்பொருள் அறிந்தோன், கச்சியப்பவாரியனால் பதி, பசு, பாசப் பண்பினைத் தெளிந்தோன், சுவர்க்கபுரத்து உறைகின்ற தவப்பிரகாச சற்குரு அருளால் பஞ்சாக்கர நிலை உணர்ந்தோன், திருப்போரூர் சிதம்பர தேவனால் முத்தி முடிவு தேர்ந்தோன், கச்சியப்ப முனிவர் ஆனந்த ருத்திரேசர் மீது வண்டுவிடு தூது, பதிற்றுப் பத்தந்தாதி, கழிநெடில் போன்ற நூல்களை இயற்றுமாறு செய்வித்தோன் என்று அப்பதிகம் சரவண தேசிகர் பற்றிய குறி களைத் தருகிறது. சரவண தேசிகர் எழுதிய அந்த ஆறு நூல்களும் அவருடைய தமிழ்ப் புலமையையும் சைவ சித்தாந்தப் பேரறிவையும் பறைசாற்றும் சான்றுகளாகத் திகழ்கின்றன. உபதேச சித்தாந்த விளக்கம் என்னும் நூலின் கடவுள் வாழ்த்தாக அமைந்த இவருடைய ஒரு பாடலைக் கீழே காணலாம்.

சீராரும் உபதேச சித்தாந்தக் கட்ட ளையைத் தெளிய ஆராய்ந்து
ஏரார் செந்தமிழ் யாப்பிலிசைப் பதனுக்கு இடையூறு ஒன்றின்றி முற்றக்
கூரார் கோடொன்று இரண்டுசெவி மூன்றுமதம் நால்வாய்க் குலாவும் ஐங்கைக்
காரார் குஞ்சர முகத்துக் கணபதி செந்தா மரைத்தாள் கருத்துட் கொள்வாம்

கணபதி வணக்கமாக அமைந்த இப்பாடலில் கணபதியின் வடிவத்தை ஒன்று, இரண்டு என்னும் எண்களில் வரிசைப்படுத்தியுள்ளார். தந்தம் ஒன்று, செவி இரண்டு, மதம் மூன்று, நால்வாய் (தொங்கும் வாய்-தும்பிக்கை), ஐந்து கை உடைய யானைமுகக் கணபதியின் பாதத்தைச் சிந்தை செய்வதாகப் பாடியுள்ளார். இந்தப் பாடலில் அவருடைய பக்தி நெறியும் தமிழ்ப் புலமையும் வெளிப்படுகின்றமையைக் காணலாம்.

1886'ஆம் ஆண்டில் இலங்கை நாட்டினரான ஆணல்ட் சதாசிவம்பிள்ளை என்பார் எழுதிய 'பாவலர் சரித்திர தீபகம்' என்னும் நூல் தமிழ்ப் புலவர்களைப் பற்றிய ஒரு தொகுப்பு நூலாகும். அதில் சரவண தேசிகர் பெயரும் இடம்பெற்றுள்ளது. சரவண தேசிகர் என்னும் பெயரில் பலர் இருந்துள்ளனர் என்று குறிப்பபிடும் அந்நூல் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த சரவண தேசிகர் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் வாழ்ந்த சரவண தேசிகர், சரவண பத்தர் என்றும் அழைக்கப்பட்டார் என்னும் குறிப்பும் அதில் உள்ளது. (பக்கம்.183, பாவலர் சரித்திர தீபகம்-தொகுதி-2, கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெளியீடு,1979).

இந்தக் குடும்பத்தினர் வாழ்ந்து வந்த த ஓலைச் சுவடிகளைத் தமிழ்த்தாத்தா உ.வே.சா. பெற்றுச் சென்றுள்ளார் என்றும் கூறுவர். அந்த ஓலைச் சுவடிகள் சரவண தேசிகரால் பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம். தமிழ் இலக்கிய வரலாற்றின் முக்கிய ஆளுமையாக விளங்கும் உ.வே.சா. இந்த வீட்டிற்கு வந்திருக்கிறார் என்பது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு. சரவண தேசிகர் இல்லற வாழ்வில் ஈடுபட்ட பின்னரே சைவத் துறவியாக மாறியுள்ளார். இவருக்கு ஒரு மகன் இருந்தார் என்னும் குறிப்பும் சரவண தேசிகரின் நூலில் கிடைக்கிறது. அவர் பெயர் மணியப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் தம் தந்தையாரான சரவண தேசிகரின் சிறப்பைப் பற்றி எழுதியுள்ள செய்யுள் ஒன்றும் அந்நூலில் இடம்பெற்றுள்ளது. தந்தையாரும் மகனாரும் தமிழ்ப் புலமையும் சைவப் பற்றும் கொண்டவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

சேர்மன் ம.த. சாமிநாதன் – ம.த. முருகேசன்

சரவண தேசிகர் புலவராகவும் சைவ சித்தாந்தத் துறவியாகவும் இக்குடும்பத்திற்குப் பெருமை சேர்த்தார். அவருக்குச் சில தலைமுறைகளுக்குப் பின்னர் 19'ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய இருவர் தங்கள் பொதுநலச் சேவையின் மூலமும் அரசியல் பணிகளின் மூலமும் கோவிற் திருப்பணிகள் மூலமும் குடும்பத்திற்குப் பெருமைதேடித் தந்துள்ளனர். அவர்கள் சாமிநாதன் மற்றும் முருகேசன் என்னும் அண்ணன் தம்பியர் ஆவர். இவர்கள் இருவரும் தணிகைமலை-மனோன்மணி இணைக்குப் பிறந்தவர்கள். இவர்களுக்கு இடையில் தெய்வசிகாமணி என்பவரும் பிறந்துள்ளார் எனினும் அவர் குடும்பத்திலிருந்து விலகி வாழ்ந்துவந்துள்ளார். ஆண்கள் மூவரோடு அந்த இணைக்குப் பார்வதி மற்றும் வள்ளி என்னும் இரண்டு மகள்களும் பின்னர்ப் பிறந்துள்ளனர். ஆனால், தணிகைமலை-மனோன்மணிக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் பிறந்தனர் என்ற குறிப்புக் கிடைக்கவில்லை. சாமிநாதன்-முருகேசன் என்னும் இவர்கள் இருவரையும் ஒன்றாக வைத்துக் காணும்படி இவர்கள் இருவரும் ஒற்றுமையாக வாழ்ந்துவந்துள்ளனர். அவர்களுள் அரசியல் களத்தில் மிக முக்கியமான பணிகளை வகித்தவரும் பின்னர்க் காஞ்சிபுர நகர மன்றத்தின் தலைவராக வெவ்வேறு

காலக்கட்டங்களில் மொத்தம் ஆறு ஆண்டுகள் வீற்றிருந்தவருமான சாமிநாதன் பற்றி முதலில் காணலாம்.

ம.த. சாமிநாதன்

இவர் 17.11.1880'இல் பிறந்தார். 19'ஆம் வயதிலிருந்தே தம்மைப் பொதுநலத் தொண்டுகளில் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார். தமிழ் மற்றும் ஆங்கிலம் என்று இரண்டு மொழிகளிலும் புலமை பெற்றுள்ளார். காஞ்சி நகராட்சி மன்ற உறுப்பினராக 24 ஆண்டுகள் இருந்து பல சேவைகள் புரிந்துள்ளார். அப்போது ஆறு ஆண்டுகள் காஞ்சி நகர மன்றத் தலைவராகவும்(சேர்மன்) பொறுப்பு வகித்துள்ளார். அவர் நகர மன்றத் தலைவராக இருந்த காலத்தில்தான் காஞ்சியில் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவர் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் காஞ்சிபுரத்திற்குப் பல செயற்திட்டங்களைக் கொண்டுவந்து நகரத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் வாழ்ந்திருந்த செங்குந்த சமூகத்தினரை ஒருங்கிணைக்கும் பணியைச் செவ்வனே செய்து பல குழுக்களாகப் பிரிந்திருந்தவர்களை ஒன்றிணைத்துள்ளார். இப்பணி பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. அவர்தம் முயற்சியின் சிறப்பினை உணர்ந்து, ஈரோட்டில் நடைபெற்ற முதல் செங்குந்த மாநாட்டில் இவரைக் கொடியேற்றி மாநாட்டைத் தொடக்கும்படி கேட்டுக்கொண்டனர். மேலும், இரண்டாவது செங்குந்த மாநாடு காஞ்சிபுரத்தில் நடைபெற்றபோது அதற்குத் தலைவராக இருந்து மாநாட்டில் தலைமையுரை ஆற்றியுள்ளார். இவர் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்துள்ளார். நகைச்சுவை ததும்பப் பேசுவதிலும் எளிமையாகச் செய்திகளை விளங்க வைப்பதிலும் இவர் வல்லவராக இருந்துள்ளார். திருநெல்வேலி அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற ஆறாவது செங்குந்த மாநாட்டில் விதவைகள் மறுமணத் தீர்மானத்தை(விதவா விவாகத் தீர்மானம்) அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மூன்று மணிநேரம் அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக உரையாற்றியுள்ளார் என்னும் குறிப்பும் நமக்குக் கிடைக்கிறது. சமூகச் சீர்திருத்தத்தில் இந்தக் குடும்பம் பங்கேற்றுள்ளது என்பது இதன்மூலம் தெரியவருகிறது. மகாத்மா காந்தி 1934'இல் காஞ்சிபுரத்திற்கு வந்திருந்தபோது காஞ்சி நகர மன்றத் தலைவர் என்ற முறையில் அவர் காந்தியை வரவேற்றுள்ளார் என்னும் வரலாற்றுக் குறிப்பும் நமக்குக் கிடைக்கிறது.(பின்னிணைப்பில் காண்க)

காங்கிரஸ், ஜஸ்டிஸ் கட்சி, தன்மான இயக்கம் என்று பல நிலைகளில் அரசியல் வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார். காஞ்சிபுரம் தாலுக்கா தேவஸ்தான கமிட்டி தலைவராகவும் சில ஆண்டுகள் இருந்துள்ளார். 1936-37'ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டசபைப் பொதுத்தேர்தலில் செங்கல்பட்டுப் பகுதியில் போட்டியிட்டு வெறும் மூன்று வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அரசியலிலிருந்து விலகி வாழ்ந்துள்ளார். அதன் பின்னர்த் தம்மை முழுவதுமாக இறைப்பணிக்காக மட்டுமே ஈடுபடுத்திக்கொண்டார். இவர் சிதிலமடைந்திருந்த கச்சபேஸ்வரர் கோவிலைப் புனரமைக்கும் திருப்பணிகளுக்கு ஊர் ஊராகச் சென்று ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலாக நன்கொடை திரட்டியுள்ளார். (அந்தக் காலத்தில் 10 கிராம் தங்கத்தின் விலை கிட்டத்தட்ட 80 ரூபாயாகவும் ஓர் அமெரிக்க டாலரின் இந்திய மதிப்புச் சுமார் மூன்று ரூபாயாகவும் இருந்ததுள்ளன என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும்). காஞ்சிபுர அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான அரசியல் தலைவராகவும் நகரமன்றத் தலைவராகவும்

செங்குந்த சமூகத்தின் இணைப்பாளராகவும் பொதுநலப் பணிகளையும் கோவில் திருப்பணிகளையும் நிகழ்த்தியவராகவும் வாழ்ந்துவந்த சாமிநாதன் 1949'இல் இறந்தார். அவர் இறந்தபோது இந்தியா விடுதலை பெற்ற நாடாகவும் குடியரசாக ஆகாத நாடாகவும் காந்தி இறந்து ஓராண்டு கடந்த நாடாகவும் இருந்தது. இவருக்கும் இவருடைய முதல் மனைவிக்கும் ஐந்து பிள்ளைகள் பிறந்துள்ளனர். அவர்களுள் இரண்டு மகன்களும் ஒரு மகளும் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர். இரண்டாவது மனைவியின் பெயர் லட்சுமி அம்மாள். இவர்களுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்துள்ளனர். இவர்களின் குடும்ப விவரம் நூலின் உள்ளே தரப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்திற்குப் பல சிறப்பான சேவைகளை ஆற்றிய சாமிநாதனின் பெயர் நிலைத்திருக்கும் வகையில் அவர் வாழ்ந்த தெருவிற்கும் பிள்ளையார் பாளையப் பகுதியில் இருக்கும் ஓர் அரசுப் பள்ளிக்கும் அவர்தம் பெயரையே சூட்டித் தமிழக அரசு அவருக்குப் பெருமை சேர்த்தது. இவருடைய மறைவிற்கான இரங்கல் நிகழ்வு தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் தலைமையில் நடைபெற்றுள்ளது. அந்த இரங்கல் நிகழ்வின் குறிப்புகள் நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளன. அதில் திரு.வி.க., ரா.பி.சேதுப்பிள்ளை போன்ற அறிஞர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். சாமிநாதன் பெரியாருடனும் நட்புடன் இருந்துள்ளார். கச்சபேஸ்வரர் கோவில் அலுவலகத்தில் இவருடைய படம் இன்றும் உள்ளது.

ம.த. முருகேசன்

சாமிநாதனுக்கு உற்ற துணையாக விளங்கியவர் அவர்தம் தம்பி முருகேசன். சாமிநாதன் தம் வாழ்க்கையைப் பெரும்பாலும் சமூக வாழ்வாகவும் சமய வாழ்வாகவும் அமைத்துக்கொண்டமையால் அவருடைய பிள்ளைகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பு முருகேசனுக்கு அமைந்தது. குடும்பத்திற்குச் சொந்தமான விளைநிலங்களைப் பராமரிப்பதும் அதில் கிடைக்கும் விளைச்சலைப் பங்கீடு செய்வதும் அதன் வருவாயைக் குடும்பத்திற்குப் பகிர்ந்தளிப்பதும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதும் என்று குடும்பப் பொறுப்புகளை முருகேசன் செவ்வனே ஏற்றுச் செய்துவந்திருக்கிறார். சாமிநாதனும் முருகேசனும் இராம இலக்குவர்களாக வாழ்ந்தனர் என்று இவர்கள் இருவருக்கும் இடையிலான உடன்பிறப்புப் பாசத்தை அனைவரும் போற்றியுள்ளனர். இவர் காஞ்சிபுரத்தில் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவி அதில் இரவுக் கல்வித் திட்டத்தை நடத்திவந்துள்ளார் என்னும் குறிப்பும் கிடைக்கிறது. அண்ணனின் பிள்ளைகளைத் தம்முடைய சொந்த பிள்ளைகளாகவே கருதித் தம் பிள்ளைகளுடன் ஒன்றாக வளர்த்து முருகேசனும் இவருடைய மனைவி விசாலாட்சி அம்மாளும் வாழ்ந்துவந்துள்ளனர். பிள்ளைகள் வளர்ப்பில் முருகேசன் அவர்களின் மனைவி விசாலாட்சி அம்மாளின் பங்கு அளப்பரியது. இவர்கள் குடும்ப விவரமும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆறு பிள்ளைகளுக்குப் பெற்றோரான இந்த முருகேசன்–விசாலாட்சி அம்மாள் இணைக்கு முதல் மகவாகப் பிறந்தவர்தாம் ம.மு. சரவணன்.

ம.மு. சரவணன்

சேர்மன் சாமிநாதனின் தம்பியான முருகேசனுக்கும் விசாலாட்சி அம்மாளுக்கும் முதல் மகவாக 24.09.1915 பிறந்தவர் ம.மு. சரவணன். சிறுவயதிலேயே பல பிள்ளைகள் இருந்த கூட்டுக் குடும்பத்தில் தோன்றியவர். அதனால், அக்கா, அண்ணன், தம்பி, தங்கைகள் என்று பல உறவுகளுக்கிடையில் வாழ்ந்துவந்தார். கிட்டத்தட்ட 1925'ஆம் ஆண்டுவாக்கில் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்புச் சேர்ந்துள்ளார். பள்ளிப் படிப்பு முடிந்ததும் சென்னையில் இருந்த தாய்மாமாவான நடராஜன் வீட்டில் தங்கிக் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார். நடராஜன் என்பவர் வழக்குரைஞராகப் பணியாற்றியவர். மிகவும் அக்கறையுடனும் கண்டிப்புடனும் சரவணனை வளர்த்துள்ளார். அவரிடம் வளர்ந்ததால் பல நல்ல பண்புகளைப் பெற்றதாகச் சரவணன் தெரிவித்திருக்கிறார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் B.A. பட்டம் 1936'ஆம் ஆண்டில் பெற்றார். அதே ஆண்டில் தம்முடைய அத்தை மகளான அழகம்மாள் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். அந்த நாளில்தான் சண்முகம்-இராதாம்மாள், சரவணன்–அழகம்மாள் மற்றும் அண்ணாமலை-பாலாம்மாள் ஆகிய மூன்று இணைகளுக்கும் திருமணம் நடந்துள்ளது. இவர்களுள் சண்முகம்-இராதாம்மாள் மற்றும் சரவணன்-அழகம்மாள் ஆகிய இரு இணைகளுக்கும் மத்தூரார் வீட்டிலும் அண்ணாமலை-பாலாம்மாள் இணைக்குப் பக்கத்து வீட்டிலும் திருமணம் நடந்துள்ளது. சரவணன் 16.12.1938'இல் ஆசிரியப் பணியில் சேர்ந்துள்ளார். சென்னை 'Teacher's College'இல் 1942'இல் ஆங்கிலம் மற்றும் வரலாற்றுப் பாடங்களில் சான்றிதழ் பெற்றுள்ளார். மேலும் அதே ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் Licentiate in Training(L.T) பட்டமும் ஆங்கிலம் மற்றும் வரலாற்றில் பெற்றுள்ளார்.

இவர் கல்வித் துறையில் பணியாற்றியதால் இராணிப்பேட்டை, குன்றத்தூர், அரியலூர் போன்ற பல இடங்களில் வேலை பார்த்துள்ளார். மாவட்டக் கல்வி அதிகாரியாக(D.E.O.) அரியலூர் மற்றும் செய்யாறு ஆகிய இடங்களில் 1960'களில் சில ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். இவர்தம் தம்பியான கந்தசாமி என்பவரும் இவரைப் போன்று தலைமை ஆசிரியராகவும் மாவட்டக் கல்வி அதிகாரியாகவும் பணிபுரிந்துள்ளார். 24.09.1973'ஆம் ஆண்டில் வாலாஜாபாத் பள்ளி ஒன்றில் தலைமை ஆசிரியராக இருந்தபோது சரவணன் பணி ஓய்வு பெற்றுள்ளார். சரவணன்-அழகம்மாள் இணைக்கு மொத்தம் 12 குழந்தைகள் பிறந்துள்ளனர். அவர்களுள் கனகா மற்றும் இராஜரத்தினம் ஆகிய இருவரும் இளம் வயதிலேயே இறந்துவிட்டனர். சரவணன்-அழகம்மாள் வழியாகப் பிறந்தவர்களின் குடும்பங்களை விளக்குவதே இந்த நூலின் நோக்கமாக இருப்பதால், இவர்களுக்குப் பிறந்த ஒவ்வொருவரின் குடும்ப விவரமும் விரிவாக நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

கல்வியிற் சிறந்த காஞ்சியில் இவரும் கல்வியிற் சிறந்து விளங்கியுள்ளார். கல்வியில் நாட்டமுடைய பலரையும் ஊக்குவித்துப் பலவிதமான உதவிகளையும் செய்திருக்கிறார். ஆங்கிலத்தில் சிறந்த புலமையுடைய இவர் தமிழிலும் சிறப்பான புலமை பெற்றிருந்தார். இவர் தினமும் காலையில் கடவுள் வழிபாடு செய்யும்போது இரண்டு பாடல்களைத் தவிராமல் பாடுவார். அவை,

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாராது இடர்

என்னும் கம்பரின் சரஸ்வதி அந்தாதிப் பாடலும்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்-கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா

என்னும் ஔவையாரின் நல்வழிப் பாடலுமாகும். இவற்றைத் தம் பேரப் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்து அவருடன் சேர்ந்து சொல்லுமாறும் ஊக்கப்படுத்துவார்.

கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதற்கு இணங்க நன்றாகப் படிக்கும் அனைவரின் வளர்ச்சியிலும் இன்பம் காண்பவர். தம் பேரப் பிள்ளைகளை அழைத்து அவர்களுக்குச் சிறந்த அறக் கருத்துகளைப் போதிக்கும் பண்புடையவர். கல்வியின் சிறப்பினை நாள்தோறும் எடுத்துச்சொல்லிக் கல்வி கற்கத் தூண்டியவர். இவரால் பயனடைந்தோர் பலர். இவர் அறிவைக் கண்டு வியந்தோர் பலர். அறிவுரைகள் சொல்வதோடு மட்டுமன்றி அவற்றைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் சான்றோராகவும் அவர் வாழ்ந்தார். தினமும் காலையில் உடற்பயிற்சி செய்யும் வழக்கத்தைக் கைக்கொண்டிருந்தவர். இவர் வீட்டில் இருக்கும் சமயங்களில் மரத்தாலான சாய்வுநாற்காலி ஒன்றில் அமர்ந்தபடி படிப்பதும் எழுதுவதுமாக இருப்பார். அதில் காகிதத்தை வைத்து எழுதுவதற்கென்று சுழலும் கைப்பிடி இருபுறமும் இருக்கும். இந்த நாற்காலியில் அமர்ந்தபடியே தமது ஓய்வுநேரத்தைக் கழிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரைப் பற்றி நினைப்பவர் பலருக்கும் அவர் வீட்டின் தாழ்வாரத்தில் அந்தச் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும் காட்சியே நினைவில் வரும்.

இவருடைய மனைவி அழகம்மாள்(18.2.1918) இவருக்கு உற்ற துணையாக இருந்து, வேண்டிய பணிவிடைகளைச் செய்தார். அழகம்மாள் சரவணனின் அத்தை மகள் ஆவார். சரவணன் வேலையில் மாற்றலாகிச் சென்ற எல்லா இடங்களுக்கும் தாமும் உடன்சென்று அவரின் வாழ்க்கைத் துணையாகச் சிறப்புடன் அவரின் வளர்ச்சிக்கு உதவினார். பணி ஓய்விற்குப் பின்னரும் சரவணன் கற்பதற்கு ஓய்வு விடாமல் தொடர்ந்து படித்தபடி இருந்தார். படுக்கையிலிருந்து எழுந்தபோது கால் தவறிக் கீழே விழுந்ததால் அவருடைய கால் பாதிப்படைந்து அவரால் முன்புபோன்று இயல்பாக நடக்கமுடியாத நிலை ஏற்பட்டது. அதன் பின்னர், பல பயிற்சிகளைச் செய்து வீட்டிலேயே நடக்கும் நிலையில் வாழ்ந்துவந்தார். நடை தளர்ந்தாலும் மனம் தளராமல் ஊக்கத்துடன் வாழ்ந்து பலருக்கும் தம்மால் ஆன உதவிகளைச் செய்துவந்தார். அப்போது அவருடன் இருந்து வேண்டியவற்றைச் செய்து உதவியர் அழகம்மாள். கல்வியிற் சிறந்து விளங்கிப் பெரும் பதவிகளில் இருந்து பலருக்கும் பல வழிகளில் உதவிசெய்து பெருவாழ்வு வாழ்ந்த சரவணன் மூப்பின் காரணமாக 22.05.2001'இல் இறந்தார். இவருடைய மனைவி அழகம்மாள் 19.1.2013'இல் தமது 95 வயதில் இறந்தார்.

பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்...

இந்த நால்வரே மட்டுமல்லாமல் வேறு சிலரும் இந்தக் குடும்பத்தில் தோன்றிப் பல அரிய செயல்களைச் செய்துள்ளனர். இவர்களின் சிறப்புகளை நினைத்துக் காலந்தோறும் நாம் பேசிக்கொண்டும் பெருமைப்பட்டுக்கொண்டும் இருக்கலாம். எனினும், பழம்பெருமையை நினைத்துக்கொண்டு மகிழ்ச்சி அடைவதோடு நாம் நின்றுவிடக்கூடாது. இவர்களுக்குப் பின் தோன்றிய நம் ஒவ்வொருவருக்கும் முக்கியமான கடமை உள்ளது. மூன்று நூற்றாண்டுகள் நிலவும் இக்குடிவழிப் பெருமையை மேலும் வளர்த்தெடுப்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். முன்னர்க் குறிப்பிட்டதைப் போன்று குடிவழிப் பெருமையைத் தொடர்ந்து வளர்த்தெடுத்தல் என்பது தொடர் ஓட்டத்தைப் போன்றது. அவ்வாறு சரவணன் ஓடி முடித்த இடத்திலிருந்து மற்றொருவர் ஓடத் தொடங்கவேண்டிய இடம் பல ஆண்டுகளாக வெற்றிடமாக இருப்பதாகவே தோன்றுகிறது. நம் குடும்பத்தினர் உயர்ந்த இலக்குகளையும் நோக்கங்களையும் கொண்டு அவற்றை அடைவதற்கான மன உறுதி உடையவர்களாக உருவாகவேண்டும். அனைவராலும் அவ்வாறு செயற்கரிய செயல்களைச் செய்ய இயலாது என்றாலும் அதற்கான திறன்களை உடையவர்களை இக்குடும்பத்தில் காணும்போது அவர்களைத் தொடக்கத்திலிருந்தே ஊக்குவிக்கவேண்டும். சரவணனுக்குப் பின்பான இந்தக் குடும்பத்திலிருந்து இவர்களைப் போன்ற பீடும் பெருமையும் மிக்க ஆளுமைகள் தோன்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியும் அவர்களுக்கு நம்மால் ஆன உதவிகளைச் செய்தும் அவர்களின் வளர்ச்சிக்கு வித்திடவேண்டும்.

புறம்பேசுவதும் காழ்ப்புணர்ச்சியுடன் ஒருவரை நடத்துவதும் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவதும் உதவிகேட்டு வருவோரிடம் பணத்தையும் மனத்தையும் பூட்டிக்கொண்டு வாழ்வதுமாகிய கறைகள் இந்தக் காலச் சமூகத்தில் ஆழமாகப் ப   ளன. அவை நம் குடும்பத்திலும் ஆங்காங்கு வெளிப்படுகின்றன என்பதும் மறுப்பதற்கில்லை. நாம் அனைவரும் மனிதர்கள். எனவே குற்றங் குறைகளும் உடையவர்கள். எனினும், அவற்றை இயன்றவரை கட்டுப்படுத்தி, வழுக்கிய இடங்களிலிருந்து நம்மைத் திருத்திக்கொண்டு சிறப்புத் தரும் நன்னெறியில் வாழ முயலவேண்டும். உடன்பிறந்தவர்களுடன் பிணக்கு, பெற்றோருடன் வாக்குவாதம், உறவினர்களுடன் கடன் சண்டை, ஓரடி ஈரடி நிலத்திற்காகத் தீராப் பகைகொள்வது, குடிப்பழக்கத்தால் பணத்தையும் உடல்நலத்தையும் அறிவையும் மானத்தையும் இழத்தல் என்னும் சிற்றறிவுச் செயற்பாடுகள் உயர்ந்த குடிக்கு இருந்தால் அது அந்தக் குடிக்கே இழுக்காகும்.

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும் (குறள்.958)

என்பார் வள்ளுவர். ஒருவரிடம் தாழ்ந்த செயல்கள் தோன்றின் அவருடைய குலப்பெருமை சந்தேகிக்கப்படும் என்கிறார்.

பெண்களை மதிப்புடன் நடத்தாத எந்தச் சமூகமும் உயராது. பெண்களை நடத்தும் விதம் குறித்தும் நாம் தற்காலச் சிந்தனைகளின் வழிச் சிந்திக்கவேண்டும். பெண்ணை, இன்பம் துய்ப்பதற்கான போகப் பொருளாகவும் வீட்டு வேலைகளைச் செய்யும் பணிப்பெண்ணாகவும் குடும்பத்தை விருத்திசெய்யும் இயந்திரமாகவும் பார்க்கும் பார்வைகள் மாறவேண்டும். அவர்களின் நியாயமான விருப்பங்களுக்கும் இலட்சியங்களுக்கும் நம்மால் ஆன உதவிகளைச் செய்துதரவேண்டும். பெண்களை

நவீன காலத்திலும் அடிமைத்தனம் செய்யும் குடும்பம் பணத்தாலும் பொருளாலும் எவ்வளவு பெரிய குடும்பமாக இருந்தாலும் அது பிற்போக்குத் தனமான, மனத்தளவில் வறுமையுள்ள குடும்பமாகவே கருதப்படும். நம் குடும்பத்திற்கு வந்த பெண்களையும் நம் குடும்பத்திலிருந்து சென்ற பெண்களையும் அவரவர்கள் மேன்மையாக நடத்துவதன் வழி இந்தக் குடும்பம் இந்த ஒட்டுமொத்தச் சமூகத்திற்கும் பெண் சுதந்திரத்தின் வழிகாட்டியாக விளங்கும்.

சின்னாள் பல்பிணிச் சிற்றறிவாளர்களாகிய நாம் நமக்குப் பெருமைதேடித் தந்தவர்களுக்கு மிகவும் கடன்பட்டிருக்கிறோம். அவர்களை நினைத்து நாம் பெருமை கொள்வதைப் போன்று அவர்களும் நம்மை நினைத்துப் பெருமை கொள்ளும் வகையில் வாழவேண்டும். அந்த வகையில் நமது சிறுமைகளை இயன்றவரை குறைத்தும் களைந்தும் நமக்கும் நம் குடிவழிக்கும் பெருமை தரும் செயல்களை அதிகமாகச் செய்யவேண்டும். அதற்கான வழியையும் வள்ளுவர் கூறியுள்ளார்.

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி (குறள்.1022)

முயற்சியும் நிறைந்த அறிவும் இணைந்த செயல்களால் ஒருவருடைய குடி உயரும் என்கிறார் வள்ளுவர். அதற்குத் தக இந்தக் குடிவழியில் முயற்சியும் அறிவும் செயல்திறனும் கொண்ட யாரேனும் தோன்றினால் ஆண் பெண் என்ற வேறுபாடின்றி அவர்களை ஆதரித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை, பொருளாலோ ஊக்கத்தாலோ, இயன்றவரை வழங்கி அவர்களை வளர்த்தெடுக்கவேண்டும். மேற்கண்டவர்களின் வரிசையில் பலரையும் உருவாக்காமல் நின்றுவிட்டால் பட்டினத்தார் 'மெய்யாய் இருந்து நாட்செல நாட்செல வெட்டவெறும் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே' என்று பாடியதைப் போன்று நம் குடும்பப் பெருமையும் மறக்கப்படும். இக்குற்றம் நம்மீது வாராமல் குடிவழிக்குப் பெருமை தரும் செயல்களைச் செய்து நம் முன்னோர்களுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் அனைவரும் வாழ்வோம். அதற்கான மன விரிவை நம் முன்னோர்கள் நமக்கு அருளட்டும்!

நன்றியுரை

இந்தத் தொகுப்பு முயற்சியில் உதவிய பலருக்கும் நன்றி கூறும் கடப்பாடு உள்ளது. இந்த முயற்சியை எட்டு ஆண்டுகளுக்கு (2012) முன்னர் விளையாட்டாகத் தொடங்கியபோது சிறிய அளவில் ஒரு தாளில் இந்தத் தொகுப்பினை நானும் கமலாம்பிகை மாமியின் மகள் பவித்ராவும் செய்துமுடித்தோம். அந்த முயற்சி அப்போதே அப்படியே கைவிடப்பட்டது. பின்னர்த் தமிழ் படிக்கும் வகையில் என் வாழ்க்கை திசை திரும்பியபோது தமிழுக்கும் சைவத்திற்கும் நம் குடும்பத்திற்குமான உறவைப் பற்றி நம் குடும்பத்தில் மூத்தவரான மறைந்த திரு பாலசுப்பிரமணியம் அவர்களுடனான உரையாடல்களின் மூலமாகத் தெளிவாக அறியும் வாய்ப்புக் கிட்டியது. அவரின் மறைவின்போது இந்தத் தொகுப்பை மீண்டும் தொடங்கி முழுமையாக நிறைவேற்றவேண்டும் என்ற உந்துதல் பிறந்தது. காமாட்சி மாமியின் மறைவின்போது அந்த எண்ணத்தை வெளிப்படுத்தியதும் அதற்கு ஆதரவும் ஊக்கமும் பலரிடமிருந்து கிடைத்தன. கருணா, பூபதி, சௌந்தர், மனோஜ், சரண், திலகா, ஜெயராணி என்று பலரும் ஊக்கப்படுத்தினர். வேண்டிய தகவல்களை வழங்கி உதவியவர்கள் வசந்த், ஹரி, இளையராஜா, ஈஸ்வரி அக்கா. பாபு அண்ணாவின் உதவியும் தக்க சமயத்தில் கிட்டியது. சாமிநாதன்

பற்றிய வாழ்க்கை வரலாற்றைப் பாபு அண்ணா கொடுத்த இரங்கல் நூலின் வாயிலாகவே எழுதமுடிந்தது. சாமித் தாத்தா என்று அழைக்கப்பட்ட சண்முகம் எழுதி வைத்திருக்கும் தன்வரலாறு (சுயசரிதம்) சாமிநாதன், முருகேசன் ஆகியோரின் குடும்பத்தைப் பற்றி அறிவதற்குப் பேருதவி புரிந்தது. வள்ளியம்மாளும் பொன்னுக்கிளி அம்மாளும் ஒருவரே என்று அவர்கள் பற்றிய குழப்பத்தைத் தீர்த்தவர் நாகு அவர்கள். சாமிநாதனின் மற்றொரு தம்பியின் பெயர் அறியாமல் தடுமாறியபோது தெய்வசிகாமணி என்று அவர் பெயரைத் தெரிவித்தவர் ஜெயராணியின் தந்தை சாந்தகுமார் அவர்கள். குடும்பப் படங்களைத் தெளிவாகவும் அழகாகவும் காயத்ரி தேவி வரைந்து கொடுத்தார். இந்த முயற்சியில் இருந்த என்னைப் பாராட்டி நம் குடும்ப உறவுகள் பலரும் எனக்கு ஊக்கமளித்தனர். கமலாம்பிகை மாமியின் ஆர்வம் குறிப்பிடத்தகுந்தது. குடும்பத்தினர் அனைவருக்கும் என் நன்றி உரியது.

இது முழுமையான தொகுப்பு நூல் இல்லை. இதில் பல செய்திகள் கிடைத்தற்கு அரியனவாக இருந்தமையால் விடுபட்டுள்ளன. காலப்போக்கில் அந்தத் தகவல்கள் கிடைக்கும்போது அவற்றையும் இணைத்துக்கொள்ளவேண்டும். இது முடிந்த நூலும் இல்லை. இக்குடும்பத்தில் மேலும் பலர் பிறந்து வருவார்கள். அவர்களிடம் இந்தக் குடும்பத்தின் பெருமையைச் சொல்லி வளர்ப்பதற்கும் அவர்கள் வழியாக இந்தப் பெருமை நீட்சியடைவதற்கும் இந்த நூல் துணைபுரியும் என்ற நம்பிக்கை உள்ளது.

அன்புடன்
தி. மோகன்ராஜ்

27.09.2020
(அல்லி அம்மாவின் நீத்தார் வழிபாடு நடைபெற்ற நாள்)

படங்களைப் புரிந்துகொள்ளுதல் குறித்து

இந்த நூலிலுள்ள படங்களைக் கீழ்வருமாறு புரிந்துகொள்ளவேண்டும்.

முருகேசன் – விசாலாட்சி

சரவணன் – அழகம்மாள்

தனம்மாள் – சரவண பெருமாள்

மேலே காண்பது போன்ற படங்களில், முருகேசன் மற்றும் விசாலாட்சி இணைக்குப் பிறந்தவர்கள் சரவணன் மற்றும் தனம்மாள் என்றும் சரவணனை அழகம்மாள் மணந்துகொண்டார் என்றும் தனம்மாளைச் சரவண பெருமாள் மணந்துகொண்டார் என்று படத்தை விளங்கிக்கொள்ளவேண்டும்.

முதலில் வரும் பெயர் அந்தக் குடும்பத்தின் வாரிசு என்றும் அவருக்கு அடுத்ததாக '-' குறியீட்டைத் தொடர்ந்து வரும் பெயர் அவரைத் திருமணம் செய்துகொண்டவர் என்றும் பொருளாகும்.

சரவணன் – அழகம்மாள்

இணைக்கு முந்தைய வரலாறு

தணிகைமலை - மனோன்மணி

- சாமிநாதன்
  (முதல் மனைவி பெயர்
  தெரியவில்லை)
  லட்சுமி அம்மாள்
  (இரண்டாம் மனைவி)
- தெய்வசிகாமணி
- முருகேசன்-விசாலாட்சி
- பார்வதி
  கணவர் பெயர்
  தெரியவில்லை
- வள்ளி (எ) பொன்னுகிளி
  சண்முகம் (எ)
  பெரியாண்டி

குறிப்பு : தணிகைமலையின் தம்பி
சூரப்பன் - காமாட்சி
பிள்ளைகள் இல்லை

சேர்மன் சாமிநாதனின் பெற்றோரான தணிகைமலை – மனோன்மணி இணையின் குடும்ப வரலாறு
(மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்று அறிய இயலவில்லை)

ம.த.சாமிநாதன் - முதல் மனைவி (பெயர் தெரியவில்லை) (17-11-1880 - 21-04-1949)

- சிவஞானம்மாள் - நாகரத்தினம்
  (பிள்ளைகள் இல்லை)
- அஞ்சலம்மாள் - துரைசாமி
  (பிள்ளைகள் இல்லை)

குறிப்பு : முதல் மனைவிக்குப் பிறந்த மேலும் இரண்டு மகன்களும், ஓரு மகளும் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர்.

சேர்மன் சாமிநாதன்– முதல் மனைவி இணையின் குடும்ப வரலாறு
(முதல் மனைவியின் பெயரும் சிறுவயதிலேயே இறந்த மூன்று பிள்ளைகளின் பெயர்களும் அறிய இயலவில்லை)



சேர்மன் சாமிநாதன்– லட்சுமி அம்மாள் இணையின் குடும்ப வரலாறு



சரவணனின் பெற்றோரான முருகேசன்– விசாலாட்சி அம்மாள் இணையின் குடும்ப வரலாறு

வள்ளி (எ) பொன்னுகிளி - சண்முகம் (எ) பெரியாண்டி



அழகம்மாளின் பெற்றோரான சண்முகம் (எ) பெரியாண்டி – வள்ளி (எ) பொன்னுகிளி அம்மாள் இணையின் குடும்ப வரலாறு

(அழகம்மாளின் தாயான பொன்னுகிளி, சேர்மன் சாமிநாதனின் தங்கையாவார்)

சரவணன் – அழகம்மாள் இணையின்

குடிவழித் தொகுப்பு

சரவணன் - அழகம்மாள்

1. ர.தெய்வானை
   ச.ரங்கநாதன்
2. ச.திருநாவுக்கரசு -
   தி.காமாட்சி
3. ச.சம்பந்தன் -
   ச.காந்திமதி
4. பா.நீலாயதாட்சி -
   மு.பாலசுப்பிரமணியம்
5. ந.புனிதா -
   சு.நடராஜன்
6. ம.ச.சுந்தர் -
   சு.கமலாம்பிகை

(தொடர்ச்சி)

சரவணன் - அழகம்மாள்

7. ச.கனகா
8. நா.பரணி -
   கோ.நாகப்பன்
9. ச.முருகேசன்
10. ச.மைதிலி (எ) அல்லி
    சண்முகம் (எ)
    சாந்தி
11. ச.ராஜரத்தினம்
12. தி.தாராராணி
    பா.திருவேங்கிடம்

சரவணன் –அழகம்மாள் இணைக்கு மொத்தம் 12 பிள்ளைகள். (பெண்கள்-7, ஆண்கள் -5)

(மகள் கனகா சிறுவயதிலும் மகன் ராஜரத்தினம் இளமைப் பருவத்திலும் இயற்கை எய்தினர்)

ர.தெய்வானை - ச.ரங்கநாதன் (21-09-1933 - 30-09-1999)

1. ர.கலாவதி - பொ.ராஜாராமன்
   - ரா.கோமதி - ச.முத்துகுமார்
   - ரா.லோகநாதன் - லோ.சியாமளா
     - லோ.தனுஷ்கா
2. செ.மாலதி - ந.செல்வராஜ்
   - செ.தமிழ்ச்செல்வி - பெ.அரவிந்தன்
     - அ.பிருத்விகாஸ்ரீ
3. மு.ஜமுனாராணி - மா.முருகானந்தம்
   - மு.சண்முகம் - ச.கவிதா
     - ச.ஷாஷினி
   - மு.யோகானந்தம்

(தொடர்சி)

ர.தெய்வானை - ச.ரங்கநாதன் (21-09-1933 - 30-09-1999)

4. ர.குமரேசன் - கு.சுகுமாரி
   - கு.மதுமதி
5. ர.வசந்தி
6. ர.வெங்கடேசன் (எ) பாபு
7. ர.கணேசன்

தெய்வானை – ரங்கநாதன் இணைக்கு மொத்தம் ஏழு பிள்ளைகள்

(பெண்கள்-4, ஆண்கள்-3)

ச.திருநாவுக்கரசு (15-06-1939 - 28-2-2003) தி.காமாட்சி (2-10-1942 - 5-7-2020)

கு.ஹேமலதா (26-1-1963 - 19-07-2021)
ச.குணசேகரன் (04-08-1955)

கு.மனோஜ்குமார்
(17-2-1984)
ரா.திலகவதி
(05-03-1991)

கு.சரவணபெருமாள்
(17-07-1987)
ச.ஜெயராணி
(15-07-1989)

ச.ரிஷிக்கா
(19-10-2017)

ப.யாமினி (20-3-1968)
க.பழனி (03-04-1963)

ப.சௌந்தர்ராஜன்
(11-01-1995)

ப.பூபதிராஜன்
(29-09-1998)

தி.சுரேஷ்குமார் (24-7-1973)
சு.யசோதா (06-02-1982)

சு.தமிழரசு
(15-09-2008)

சு.தமிழ்செல்வி
(7-10-2013)

திருநாவுக்கரசு – காமாட்சி இணைக்கு மொத்தம் மூன்று பிள்ளைகள்
(பெண்கள்-2, ஆண்-1)

ச.சம்பந்தம் (4-5-1941) - ச.காந்திமதி (23-10-1948 - 16-9-1969)

ச.விஸ்வேஸ்வரன் (9-8-1966)
தே.தேவி (18-9-1967)

வி.இளையராஜா (27-7-1989)
ச.ஷர்மிளா (12-5-1995)

கி.அகிலாண்டேஸ்வரி (12-9-1968)
சு.கிருபாகரன் (12-12-1962)

கி.வசந்த்ராஜ்
(7-5-1989)
வ.ஜனனி
(1-1-1996)

தி.திவ்யா
(1-7-1991)
வ.திருநாவுக்கரசு
(12-6-1986)

தி.ஜோஷிதா
(4-7-2014)

சம்பந்தம் – காந்திமதி இணைக்கு மொத்தம் இரண்டு பிள்ளைகள் (பெண்-1, ஆண்-1)

பா.நீலாயதாட்சி - மு.பாலசுப்பிரமணியம்

1

- பா.குப்புசாமி (11-7-1960)
  கு.ராணி (5-12-1969)
  - ஜீ.சங்கீதா (23-9-1988)
    ஜீவானந்தம் (5-9-1987)
    - ஜீ.சஞ்சீவ் (16-5-2017)
  - சீ.ராகபிரியா (8-9-1994)
    சீனிவாசன் (1-7-1992)

2

- பா.சுப்புகுட்டி - சு.தாட்சாயணி
  - சீ.சுதா (24-3-1988)
    ஜெ.சீனிவாசன் (27-11-1982)
    - சீ.சு.ஹரிணி (30-12-2012)
  - சு.சரவணன் (14-9-1992)
    ச.சங்கீதா (25-10-1996)
    - ச.யோகித் (31-7-2020)

(தொடர்ச்சி)

பா.நீலாயதாட்சி - மு.பாலசுப்பிரமணியம்

3

- சே.பரிமளாதேவி (25-11-1965)
  அ.சேகர் (18-4-1956)
  - சே.சிவராஜ் (22-6-1984)
    சி.பாரதி (17-5-1987)
    - சி.விஷ்வத் (25-2-2016)
    - சி.தருண் (21-7-2018)
  - சே.பூபேஷ்குமார் (31-1-1986)
    பூ.கிருபாதேவி (17-10-1992)
    - பூ.ஜஷ்வந் (3-12-2016)

4

- பா.சுமதி - பாண்டியன்
  - பா.சிவராமன் (14-8-1987)
    சி.சந்தியா (15-11-1992)
    - சி.கவிஷ் (22-7-2016)
  - பா.பாஸ்கர்
    பா.கீதா
    - பா.ரத்தீஷ்
    - பா.ஹாஜேஷ்

நீலாயதாட்சி – பாலசுப்பிரமணியன் இணைக்கு நான்கு பிள்ளைகள் (பெண்கள்-2, ஆண்கள்-2)

ம.ச.சுந்தர் (16-5-1948 - 11-6-2017) - சு.கமலாம்பிகை (19-4-1959)

- சு.பவித்ரா (4-1-1986)
  கி.அண்ணாமலை (7-12-1984)
  - அ.மோஹித் ராகவ் (29-4-2015)
  - அ.திகழினி (29-1-2019)
- ம.சு.கருணாமூர்த்தி (26-2-1988)

சுந்தர் – கமலாம்பிகை இணைக்கு இரண்டு பிள்ளைகள் (பெண்-1, ஆண்கள்-1)

நா.பரணி (29-6-1951) கோ.நாகப்பன் (7-2-1950)

- கு.ஈஸ்வரி (31-10-1973)
  க.குணசேகரன் (28-9-1966)
  - கு.கோகுல கிருஷ்ணன் (30-1-1998 - 28-11-1999)
  - கு.ராஜேஷ் (27-10-2000)
- நா.முகுந்தன் (2-4-1979)
  ம.யுவராணி (31-3-1986)
  - மு.ஹேமவர்ஷினி (30-6-2014)
  - மு.ஹரிஹரன் (6-12-2017)
- நா.மாதவன் - பிரியா
  - மா.கார்த்தி
- நா.சுபாஷினி (13-8-1984 - 28-11-1999)

பரணி – நாகப்பன் இணைக்கு நான்கு பிள்ளைகள் (பெண்கள்-2, ஆண்கள்-2)
(கடைசி மகள் சுபாஷினி சிறுவயதிலேயே இறந்துவிட்டார்)

ச.மைதிலி (எ) அல்லி (16-5-1956-15-9-2020) அ.சண்முகம் (எ) சாந்தி (25-4-1951-28-7-2017)

- பா.ரத்தினமாலினி (19-5-1976)
  அ.பாஸ்கர் (27-11-1967)
  - பா.ஹரிபிரசாத் (22-8-1995)
- ச.தீனதயாளன் (23-10-1977)
  சி.பொற்கொடி (26-3-1982)
  - தீ.ஹாசினி (7-11-2009)
  - தீ.பிரியதர்ஷினி (3-8-2011)

அல்லி – சண்முகம் இணைக்கு இரண்டு பிள்ளைகள் (பெண்-1, ஆண்-1)

தி.தாரராராணி (3-4-1961 - 18-5-2021)- **பா.திருவேங்கடம்** (25-11-1955)

தி.மோகன்ராஜ் (28-5-1985)
இ.காயத்ரிதேவி (22-9-1984)

மோ.கிருத்திலயா (19-6-2012)

தி.சத்தியராஜ் (5-2-1988)

தாரராராணி – திருவேங்கடம் இணைக்கு இரண்டு பிள்ளைகள் (ஆண்கள்-2)

பின்னிணைப்பு



காஞ்சீபுரம்

சரவணதேசிகர்

அருளிச்செய்த

வீட்டுநெறியுண்மை.

ஒருபாவுண்மையுபதேசம்.

பஞ்சாக்கரவநுபூதி.

உபதேசசித்தாந்தம்.

முத்திமுடிவு.

ஒருபாவொருபஃது.

இவை

கனம்பொருந்திய வித்துவான்க

ளாகிய

திரு. விசாகப்பெருமாளையர்.

திரு. சரவணப்பெருமாளையர்.

கா. குமாரசுவாமி கவிராயர்.

இவர்களால்

பரிசோதித்து அச்சிற் பதிப்பிக்கப்

பட்டன.

சரவண தேசிகர் எழுதிய நூல்களின் அச்சுப் பிரதி முகப்புப் பக்கம்

சேர்மன் ம.த.சாமிநாத முதலியார்
17-11-1880 - 21-7-1949



காஞ்சிப் பெரியார்

—(திரு. வி. க.)—

காஞ்சிமா நகரம் பண்டை நாளில் பல பெரியோரை ஈன்றது. இந்நாளிலும் அந்நகரம் ஒரு பெரியாரை அளித்தது. அவர் யார்? அவரே பிள்ளையார் பாளையம் சாமிநாத முதலியார். அப் பெரியாரும் மறைந்தார்.

காஞ்சிப் பெரியார் சாமிநாத முதலியார் நட்பு, எனக்குச் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்னரே கிடைத்தது. அவரது வாழ்க்கை நட்புக்கோர் இலக்கியம் என்பதை யான் உணர்ந்தேன். நண்பர் தம் சைவப்பற்றும், தமிழ்க் காதலும், தேசபக்தியும், தொண்டுத் திறனும், அன்பொழுக்கமும், அமைதி நடையும், மலர்ந்த முகமும், இன்சொல்லும் எனமுன்னே ஒளிர்ந்து ஒளிர்ந்து உலவுகின்றன. அவ்வுலா என் கருத்தினின்றும் நீங்குங்கொல்!

காஞ்சி நகரசபை, முதலியார் தலைமையைப் பல்லாண்டு பெற்று இன்புற்றது. அவர் தம் தலைமைத் தொண்டு காஞ்சியைப் பல வழியிலும் வளர்த்தது. இதற்கு இக்காலக் காஞ்சியே சான்று கூறும். செங்கற்பட்டு மாவட்டக் கழகத்திலும் நண்பர் உறுப்பினராய் அமர்ந்து ஆற்றிய பணிகள் பல. அவற்றை இன்றும் செங்கற்பட்டு அணிந்தே நிற்கிறது.

அன்பர் சாமிநாத முதலியார் முதுமைப் பருவத்திலும் வாளா கிடந்தாரில்லை. கச்சபாலயத்தைப் புதுக்கும் பணியில் அன்பர் முதுமை கழிந்தது. அக்கச்சபாலயம் கதறுகிறது; புதுமைக் கோபுரங்களும் ஓவியங்களும் கண்ணீர் உகுக்கின்றன. அக்காட்சி கண்டு கச்சியம்பதி [illegible] ஆழ்கிறது.

காஞ்சியே! மீண்டும் சாமிநாதரை நல்குவையோ? காமாட்சி! கருணை புரிக.

சேர்மன் சாமிநாதன் மறைவிற்குத் திரு.வி.க.வின் இரங்கற் குறிப்பு

காஞ்சிபுரத்திற்கு ரயில் பயணத்தில் விஜயம் செய்த தேச பிதா காந்தியடிகள்

தெய்வநாதன் காஞ்சிபுரம் 330/14



மகாத்மா அவர்கள் ஆன்மீகம், அகிம்சை சத்தியத்தின் வழியில் நடந்து உலகின் மாமனிதராக விளங்கியவர்.

1934–ல் இரயில் மூலம் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்து நாட்டின் விடுதலைக்காக சொற்பொழிவு ஆற்றினார்கள். நகராட்சி தலைவர் ஆக பணியாற்றிய வணக்கத்திற்குரிய சேர்மன் **சாமிநாத முதலியார் நெ.ச. ராஜரத்தின முதலியார்** வரவேற்பு அளித்தார்கள். அவர்கள் சொற்பொழிவு ஆற்றியதின் நினைவாக அந்த இடம் காந்தி மைதானம் என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

அனைவரும் சமத்துவம் சமூக பொருளாதாரம், கல்வி மற்றும் உரிமைகள் அனைத்தும் பெற்றிட அயராது உழைத்த உத்தம தலைவராக விளங்கியவர்.

மனிதனும் தெய்வமாகலாம் என்ற தத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்.

"அவர் வழி நடப்போம் அவரை போற்றிடுவோம்,
வணங்கிடுவோம், வாழ்த்திடுவோம்,
வந்தே மாதரம், ஜெய்ஹிந்த்"



சேர்மன் சாமிநாத முதலியார்

சேர்மன் சாமிநாதன் காந்தியை வரவேற்ற வரலாற்றுக் குறிப்பு
(நன்றி: உலக வரலாற்றில் காஞ்சி மாநகரம் இதழ்)



ம.த. முருகேச முதலியார்
மறைவு: 22-1-1953

சரவணனின் தந்தை முருகேசன்

திருமதி.விசாலாட்சி அம்மாள்
01-06-1898 - 29-2-1984

சரவணின் தாயார் விசாலாட்சி அம்மாள்





சரவணன் பெற்ற B.A மற்றும் L.T. பட்டச் சான்றிதழ்கள்

ம.மு.சரவண முதலியார் B.A., LT.,
24-09-1915 - 22-05-2001

s

குடும்பத்தினர் சிலருடன் மத்தூரார் வீட்டில் அழகம்மாள்

சரவணன்-அழகம்மாளின் மகன்கள் திருநாவுக்கரசு, சம்பந்தன், சுந்தர், முருகேசன்

(இடமிருந்து வலமாக)

நன்றி